SL. No. : J

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 57 ]
Total No. of Questions : 57 ]

**CCE PF**
**CCE PR**

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8
[ Total No. of Printed Pages : 8

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **85-T**

**Code No. : 85-T**

# ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

# Subject : SOCIAL SCIENCE

**( ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )**

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**(ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ & ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Private Fresh & Private Repeater)**

ದಿನಾಂಕ : 06. 04. 2018 ]
[ Date : 06. 04. 2018

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–12-45 ರವರೆಗೆ ]
[ Time : 9-30 A.M. to 12-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ]
[ Max. Marks : 100

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 57-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. புறவய மற்றும் அகவய வகை வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலக்கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் விடைகளை எழுதுவதற்கான அதிகபட்ச நேரம் வினாத்தாளின் மேற்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ளது, மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களையும் அது உள்ளடக்கியது.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஓட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

I. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமைபெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $10 \times 1 = 10$

1. வாணிகம் செய்வோருக்கு மிகவும் பொருத்தமான வங்கி கணக்கு எது ?

   (A) சேமிப்பு வங்கி கணக்கு

   (B) நடப்பு வங்கி கணக்கு

   (C) தொடர் வைப்பு தொகை வங்கி கணக்கு

   (D) பருவ வைப்பு தொகை வங்கி கணக்கு.

2. வரதட்சணை தடுப்புச் சட்டம் எந்த ஆண்டில் கொண்டு வரப்பட்டது ?

   (A) 1961 (B) 1987

   (C) 1988 (D) 1989.

3. பின்வருவனவற்றுள் நேர்முக வரி எது ?

   (A) மத்திய கலால் வரி (B) தனிநபர் வருமான வரி

   (C) சேவை வரி (D) அயல்நாட்டு சுற்றுலா வரி.

4. "**அ**" பிரிவில் தொழில் முனைவோரின் பெயர்களும், "**ஆ**" பிரிவில் அவர்கள் ஏற்படுத்திய அமைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான இணையைக் கண்டுபிடித்து எழுதுக.

| | **பிரிவு - அ** | | **பிரிவு - ஆ** |
|---|---|---|---|
| (a) | அசிம் பிரேம்ஜி | (i) | உயிரிய தொழில்நுட்பம் ( Biocon Ltd. ) |
| (b) | பிரதாப் ரெட்டி | (ii) | ஜெட் வான்வழிகள் |
| (c) | கிரண் மசூம்தார் ஷா | (iii) | விப்ரோ தொழில்நுட்பம் |
| (d) | நரேஷ் கோயல் | (iv) | அப்பல்லோ மருத்துவமனைகள். |

| | ***a*** | ***b*** | ***c*** | ***d*** |
|---|---|---|---|---|
| (A) | iv | i | ii | iii |
| (B) | i | ii | iii | iv |
| (C) | iii | iv | i | ii |
| (D) | ii | iii | iv | i. |

5. ராஜஸ்தான் மாநிலத்தில் மிகப் பரவலாகக் காணப்படும் மண் எது ?

   (A) வண்டல் மண் (B) பாலைவன மண்

   (C) செம்மண் (D) சிவப்பு கப்பிக்கல் மண்.

6. கி.பி. 1909-ல் கொண்டுவரப்பட்ட மிண்டோ-மார் சீர்திருத்தம் இந்திய நாட்டு பிரிவினைக்கு எவ்வாறு காரணமாக அமைந்தது ?

(A) அது இரட்டை ஆட்சியை ஒழித்தது

(B) அது மத்திய அரசுத்துறையை ஏற்படுத்தியது

(C) அது தொழிலாளர் குழுவுக்கு இந்தியர்களைத் தேர்ந்தெடுத்தது

(D) சமய அடிப்படையில் தனியின வாக்காளர் தொகுதியை ஏற்படுத்தியது.

7. கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் குறிக்கப்பட்ட சரியான இடங்களின் இணையைக் கண்டுபிடித்து எழுதுக :




(A) 1 — அம்ருதசரஸ், 2 — கவுகாத்தி, 3 — ஐதராபாத்

(B) 1 — கவுகாத்தி, 2 — ஐதராபாத், 3 — அம்ருதசரஸ்

(C) 1 — ஐதராபாத், 2 — அம்ருதசரஸ், 3 — கவுகாத்தி

(D) 1 — அலகாபாத், 2 — ஐதராபாத், 3 — அம்ருதசரஸ்.

8. நெல்சன் மண்டேலாவுக்கு இந்தியா வெற்றிகரமாக உதவியது. ஏன் ?

(A) நெல்சன் மண்டேலாவை "ஆப்பிரிக்க காந்தி" என இந்தியா அழைத்தது

(B) நம்முடைய அயல்நாட்டுக் கொள்கை நிறவெறிக் கொள்கைக்கு எதிரானது

(C) ஐ.நா. சபையில் இந்தியா ஒரு முக்கிய நாடாக விளங்குகிறது

(D) இந்தியா அணிசேராக் கொள்கையை பின்பற்றுகிறது.

9. டிசம்பர் 10 ம் தேதியை நாம் ஏன் “மனித உரிமைகள் தினமாக” கொண்டாடுகிறோம் ?

(A) கி.பி. 1865 டிசம்பர் 10ல் ஆப்ரகாம் ங்கன் அடிமை முறையை ஒழித்தார்

(B) கி.பி. 1993 டிசம்பர் 10ல் நெல்சன் மண்டேலா சிறையி ருந்து விடுவிக்கப்பட்டார்

(C) கி.பி. 1948 டிசம்பர் 10ல் ஐ.நா. சபை மனித உரிமைகளை அறிவித்தது

(D) இந்தியா தனது மக்களுக்கு அடிப்படை உரிமைகளை அறிவித்தது.

10. சுவாமி தயானந்த சரஸ்வதியால் கொண்டுவரப்பட்ட சுயராச்சியம் மற்றும் சுயதர்ம கொள்கைகள் இந்தியர்களை எதற்காக தூண்டியெழுப்பியது ?

(A) வகுப்புவாதமற்ற சமூகத்தை ஏற்படுத்துவதற்காக

(B) சதி மற்றும் குழந்தை திருமணம் ஆகியவற்றை ஒழிப்பதற்காக

(C) இந்திய விடுதலை இயக்கத்தில் மக்கள் பங்கெடுப்பதற்காக

(D) கல்வி சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்காக.

II. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வரியில் விடையளி : $14 \times 1 = 14$

11. பொதுமக்களின் வரலாற்றை எழுதுவது வரலாற்றாளர்களுக்கு எவ்வாறு ஒரு சவாலாக உள்ளது ?

12. இஸ்லாமிய சமூகத்திற்கு சர். சையத் அகமது கான் எவ்வாறு கல்வி பணி ஆற்றினார் ?

13. ரஷ்யாவில் பொது உடமைக் கொள்கை எவ்வாறு சிதைவுற்றது ?

14. ஆங்கிலேயர்களின் எந்தக் கொள்கை இந்தியாவில் வகுப்பினவாத பிரிவினைக்கு காரணமாக அமைந்தது ?

15. குடியேற்ற முறை ( காலனித்துவ முறை ) என்றால் என்ன ?

16. சிப்கோ இயக்கத்தின் தலைவர்கள் யாவர் ?

17. சர்வ சிக்ஷ அபியான் கல்வித் திட்டம் எவ்வாறு குழந்தை தொழிலாளர் ஒழிப்பில் தலையாய பங்காற்றுகிறது ?

18. எவ்வகை மண் ரேகர் மண் ( Regur Soil ) என அழைக்கப்படுகிறது ?

19. ‘தேசிய மின்பகிர்வு வலைப்பின்னல் முறை’ ( National Power Grid ) ஏன் ஏற்படுத்தப்பட்டது ?

20. கடற்கரை ஓரங்களில் நாம் ஏன் மாங்குரோவ் காடுகளை வளர்க்க வேண்டும் ?

21. புயல் காற்றுகளினால் அதிகம் பாதிக்கப்படும் இந்திய மாநிலங்கள் எவை ?

22. மக்களவையில் (லோக்சபா) நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்பவர் யார் ?

23. “இந்தியாவின் உண்மையான முன்னேற்றம் அதன் கிராமங்களின் வளர்ச்சியில் உள்ளது” என்று கூறியவர் யார் ?

24. “வங்கிகளின் தாய்” என்று ரிசர்வ் வங்கி (தலைமை வங்கி) ஏன் அழைக்கப்படுகிறது ?

III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டி ருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளி :

25 × 2 = 50

25. இந்தியாவிற்கு புதிய கடல்வழியைக் கண்டுபிடிக்க ஐரோப்பியர்களுக்கு தூண்டுகோலாக அமைந்த காரணிகள் யாவை ?

*அல்லது*

பக்சார் போரின் விளைவுகள் யாவை ?

26. மைசூர் உடையார்களை இன்றும் நாம் ஏன் நினைவு கூறுகிறோம் ?

27. மொழி அடிப்படையில் ஆந்திரப் பிரதேசம் ஒரு மாநிலமாக உருவானது இந்திய அரசுக்கு எவ்வாறு மிகவும் அவசியமான ஒன்றாயிற்று ?

28. அமெரிக்காவுக்கு ஒரு சவாலான மற்றும் வ மையான நாடாக ரஷ்யாவை ஜோசப் ஸ்டா ன் எவ்வாறு ஏற்படுத்தினார் ?

29. கல்லாமையைப் போக்க மத்திய அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

30. உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு ( FAO ) எவ்வாறு செயல்படுகிறது ?

31. தற்போது இந்தியாவில் தீண்டாமை வன்கொடுமைகள் குறைந்துள்ளன. காரணங் கூறுக.

32. இந்தியாவின் அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் இலட்சத் தீவுகள் ஆகியவற்றுக்கிடையே உள்ள வேறுபாடுகளைப் பட்டிய டுக.

33. இந்திய பொருளாதாரத்தில் இந்திய கால நிலை எவ்வாறு மிகப் பெரிய பங்காற்றுகிறது ?

34. கீழே நான்கு வகை மரங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள் வெப்பமண்டல புல்வெளி காட்டு மரங்கள் எவை என்றும் இமயமலை ஆல்பைன் காட்டு மரங்கள் எவை எனவும் இருவகைப்படுத்துக.

சில்வர், பபூல், சேஷம் ( Seesum ), லாரெல் ( Laurel ).

35. காரிப் மற்றும் ராபி ஆகிய இரு வேளாண் பருவங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?

36. தூரப் புலனுணர்வு தொழில்நுட்பம் ( remote sensing technology ) எவ்வாறு இயற்கை இடர்பாடுகள் காலக்கட்டத்தில் பேருதவியாக உள்ளது ?

37. மக்கள்பெருக்கத்தால் ஏற்படும் எண்ணற்ற பிரச்சனைகள் யாவை ?

38. ஒரு நாடு அனைத்து வளர்ச்சிகளைக் கொண்ட நாடாக எப்போது திகழ முடியும் ?

39. உலகமயமாக்கலால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் யாவை ?

40. ஐதராபாத் கருநாடகப் பகுதிகள் யாவை ?

41. இந்தியாவின் முக்கியமான சமூக சீர்திருத்தவாதிகள் யாவர் ?

42. இந்திய அயல்நாட்டுக் கொள்கையின் நோக்கங்கள் யாவை ?

43. தீவிரவாதத்தினால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை ?

44. தீண்டாமையை முற்றிலுமாக ஒழிக்க அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

45. இந்தியாவின் நான்கு இயற்கைப் பிரிவுகள் யாவை ?

46. இந்தியாவில் காணப்படும் மண்வகைகள் யாவை ?

47. இந்தியாவின் நான்கு பருவக்காலங்கள் யாவை ?

48. மனித வளர்ச்சி காட்டிகள் ( Human Development indicators ) யாவை ?

49. வங்கிகள் ஆற்றும் அரும்பணிகள் யாவை ?

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஆறு வாக்கியங்களில் விடை தருக : $6 \times 3 = 18$

50. ஆங்கிலேயரின் நிர்வாக முறை மற்றும் பொருளாதாரக் கொள்கை எவ்வாறு முதல் இந்திய சுதந்திர போருக்குக் காரணங்களாக அமைந்தன ?

*அல்லது*

ஆங்கிலேயரின் நிலவரி முறை எவ்வாறு இந்திய விவசாயிகளைப் பாதித்தது ?

51. இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையே நிலவும் உறவு தற்போது ஏன் ஆரோக்கியமாக இல்லை ?

*அல்லது*

மனித உரிமைகளை நிலைநாட்டுவதில் இந்தியா எவ்வாறு ஒரு முக்கிய பங்காற்றுகிறது ?

52. வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

*அல்லது*

பெண்களின் சுய உதவிக்குழு திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.

53. ஆற்றல் வளங்களின் குறைபாட்டைப் போக்க எடுக்கப்பட்ட பரிகார நடவடிக்கைகள் யாவை ?

*அல்லது*

இந்தியாவில் சாலை போக்குவரத்தால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை ?

54. விடுதலைக்குப் பிறகு பொருளாதார முன்னேற்றத்தை அடைய இந்தியா எவ்வாறு முயன்று வருகிறது ?

*அல்லது*

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வாறு கிராம முன்னேற்றம் துணை புரிகிறது ?

55. காப்பீட்டின் ( Insurance ) நன்மைகள் யாவை ?

*அல்லது*

தொழில் முனைவரின் பண்புநலன்கள் யாவை ?

V. பின்வரும் வினாவிற்கு எட்டி ருந்து பத்து வாக்கியங்கள் வரை விடை தருக : 4

56. இந்திய விடுதலைப் போராட்டத்தில் சுபாஷ் சந்திர போஸ் ஆற்றிய பங்கு குறித்து எழுதுக.

VI. 57. இந்தியத் தரைப்படம் வரைந்து, பின்வருமிடங்களைக் குறிக்கவும் : 1 + 3 = 4

a) $23\frac{1}{2}^{\circ}$ வடக்கு அட்சரேகை

b) நாகார்ஜுன சாகர் அணைக்கட்டு திட்டம்

c) பத்ராவதி.

**பார்வைத்திறன் குறைபாடுள்ள மாணவர்களுக்கான மாற்று வினா : (வினா எண் 57க்கு மாற்று வினா)**

இந்திய மக்களின் வாழ்வில் இமய மலையின் பயன்கள் யாவை ? 4